சார்பு நீதிமன்றம், குளித்தலை.

முன்னிலை - திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ., பி. எல்.,

சார்பு நீதிபதி, குளித்தலை.

2025-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18 ம் தேதி வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண். **414 / 2023**

(CNR No.TNKR-08-001018-2023)

ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, குளித்தலை கிளை, அதன் சார்பாக கிளை மேலாளர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம். . . . வாதி

/எதிர்/

T. ஜெகதீசன், வயது 55, த/பெ. தியாகராஜன், எண்.3/151, ஹரிஜன தெரு, பாலூர், முத்தரசநல்லூர் அஞ்சல், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி மாவட்டம்.

. . . பிரதிவாதி

வாதி வங்கியிடம் இருந்து பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.3,80,205.00/–(ரூபாய் மூன்று இலட்சத்து என்பதாயிரத்து இருநூற்றி ஐந்து மட்டும்) தொகையை 10.60/– சதவீத வட்டியுடன் செலுத்தக்கோரி வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்த நாள் : 05.09.2023

வழக்கிற்கான வழக்கு மூலம் –16.04.2012, 08.04.2015, 28.03.2018 மற்றும் 20.03.2021 ஆகிய தேதிகளில் குளித்தலை வட்டம் இந்நீதிமன்ற ஆள்வரைக்குள் ஏற்பட்டுள்ளது.

Valuation of the suit for the purpose of Court fees and jurisdiction is Rs.3,80,205.00/-

**DETAILS OF VALUATION**

| | | |
|---|---|---|
| Amount payable by the first defendant to the Plaintiff bank as on 03.07.2023 as per Rate of 10.60% the Statement of accounts maintained by the Plaintiff bank in respect of Term loans | ரூ. | 3,80,205/- |
| Court fees paid there on under section 22 of TNCF Act is | ரூ. | 11,408/- |

இவ்வழக்கு கடந்த 16.07.2025-ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. ஷேக் அன்வர்தீன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலித்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**ஒருதலைபட்ச தீர்ப்பாணை**

1) வழக்கு அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதியானவர் வாதியின் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையான ரூ.1,46,000/–ம் தாவா தொகையான ரூ.3,80,205/–ற்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வட்டியும் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2) வாதிக்குரிய வழக்கின் செலவுத் தொகை ரூ.**14,704.00**/-யை பிரதிவாதி செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

| செலவுத் தொகை விபரம் | | வாதி<br>ரூ.பை. | பிரதிவாதி<br>ரூ.பை. |
|---|---|---|---|
| நீதிமன்றக் கட்டணம் | – | 11,408.00 | - |
| வக்காலத்து | – | 10.00 | - |
| வழக்குரை தயாரிக்க | – | 100.00 | - |
| கட்டளை பணிகளுக்கு கட்டணம் | – | 10.00 | - |
| இடைக்கால மனு செலவு | – | - | - |
| வழக்கறிஞர் ஊதியம் (முதுநிலை) | – | 3,176.00 | - |
| (இளநிலை) | – | - | - |
| **மொத்தம்** | | **14,704.00** | - |

2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

ஒம் /–(ஈ.முத்துசாமி)
**சார்பு நீதிபதி,**
**குளித்தலை.**